
- சிந்திய மருந்துகள், மாத்திரைகள் மற்றும் தீங்குவிளைவிக்கக்கூடிய பொருட்களை உடனடியாக சுத்தம் செய்யவும்.
- நொருங்கிய கண்ணாடி துண்டுகளுக்கு அருகில் திறந்த கொள்கலன்களில் இருக்கும் உணவுகளை உண்ணவோ அல்லது அருந்தவோ வேண்டாம்.
- கடுமையான சேதத்திற்கு உள்ளான கட்டிடத்திற்கு வெளியே நிற்க வேண்டாம். அதிர்ச்சியின் பின்னர் அவை கீழே விழலாம்.
- பொதுமக்களின் பாதுகாப்பு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவும்.
- பாதிப்படைந்த பிரதேசத்திற்கு உங்களுடைய உதவி தேவைப்படாத பட்சத்தில் செல்ல வேண்டாம்.
- அவசர வாகனங்கள் செல்வதற்கு ஏற்ற வகையில் பாதையை துப்பரவாக வைத்திருக்கவும். பூமி அதிர்ச்சியினால் உளவியல் அதிர்ச்சிக்கு உள்ளானவர்கள் மற்றும் உங்கள் பிள்ளைகளுக்கு உதவியாக இருப்பதுடன் அவர்களின் பயத்தையும் அகற்றவும்.



## பூமி அதிர்ச்சியின் போது எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை

- கட்டிடத்தினுள் இருந்தால் உங்கள் தலையை பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் உறுதியான இடங்களில் குனிந்து இருக்கவும். வெளியில் இருந்தால் கட்டிடங்கள், மரங்கள் அற்ற வெளியான இடத்திற்கு செல்லவும்.




**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
வித்யா மாவத்தை, கொழும்பு - 07.
தொலைபேசி : 011 2136203
தொலைநகல் : 011 2670025/ 79
மின்னஞ்சல் : info@dmc.gov.lk
website : http://www.dmc.gov.lk
facebook :DMC Srilanka
twitter :DMC - Sri Lanka
அவசர செயற்பாட்டு நிலையம் : 011 2670002

# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**
**துரித அழைப்பு எண்**

**117**

# பூமி அதிர்ச்சி

## பூமி அதிர்ச்சி நிகழும்போதும், பின்னரும் நீங்கள் செய்யவேண்டியது என்ன?




# பூமி அதிர்ச்சியின் போது

## நீங்கள் வீட்டிற்குள் இருந்தால்,

- பலமான மேசை அல்லது வாங்கினை நுழைவுப் பாதை அல்லது மூலைப்பகுதியை நோக்கி நகர்த்தி அதன் அடியில் நுழைந்து இறுக்கமாக பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்.



- வழுக்கி அல்லது இடறி விழக்கூடிய பாரமான பொருட்கள், யன்னல், புத்தக அலுமாரி, பீரோ, பாரமான கண்ணாடி மற்றும் தொங்கு தாவரங்கள் என்பவற்றில் இருந்து விலகி இருக்க வேண்டும்.
- விழும் இடிபாடுகள் மற்றும் கண்ணாடி சிதறல்களில் இருந்து முகம் மற்றும் தலையை பாதுகாப்பதற்கு இலகுவாக கையாளக்கூடிய ஏதாவது ஒன்றினால் மூடவும். (கோட், படுக்கை விரிப்பு, புத்தகம், புதினத்தாள், அலுமாரிப் பெட்டி போன்றவை)
- வாயு ஒழுக்குகளுக்கான சாத்தியம் இருப்பதனால் மெழுகுதிரி, தீப்பெட்டி அல்லது வேறு திறந்த தீச்சுவாலைகளை பயன்படுத்த வேண்டாம்.



## மிகவும் உயரமான கட்டிடத்தில் இருக்கும் போது,

- உயரமான கட்டிடங்களில் இருந்தால
- பாரமான தளபாடம் அல்லது மேசைக்கு கீழ் உட்புகுந்திருக்க வேண்டும்.
- யன்னலில் இருந்து விலகியிருக்க வேண்டும். வெளிச்செல்லும் வழியை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம்.
- மின்சாரம் தடைப்படும் வாய்ப்பு இருப்பதனால் ஒருபோதும் மின்சார தூக்கியை பயன்படுத்த வேண்டாம்.

## நீங்கள் வெளியில் இருக்கும் போது,

- திறந்த வெளிக்கு நகரும்போது மின்சார இணைப்புக்கள், மின்கம்பங்கள், மரம், உயரமான கட்டிடங்கள், சுவர், மின்விளக்கு கம்பங்கள் என்பவற்றிலிருந்து கவனமாக இருக்க வேண்டும்.
- கதவு வழிக்கு வெளிப்பக்கம் மற்றும் வெளிப்பக்க சுவர்பக்கமாக விழுகின்ற சுவர் இடிபாடுகள் மிகவும் ஆபத்தானவை.
- விழுந்துள்ள மின்கம்பிகளில் இருந்து தூர விலகி இருக்கவும்.
- அதிர்வு நிற்கும் வரை வெளியான பிரதேசத்தில் நிற்கவும்.

## கட்டிடத்திற்கு அருகாமையில் நடந்து செல்லும்போது,

விழுகின்ற செங்கட்டி, கண்ணாடி, சுவர் பூச்சு மற்றும் இடிபாடுகளில் இருந்து உங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் கதவுவழியாக குனிந்து செல்லவும்.



## நீங்கள் சனநெருக்கடி கூடிய இடத்தில் இருந்தால்,

நுழைவாயிலை நோக்கி ஓடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் உங்களைப் போன்றே நூற்றுக்கணக்கான மற்றையவரும் அதே முயற்சியில் ஈடுபடுவதாகும். கண்காட்சி பொருட்களிலிருந்து விலகியிருங்கள்.

## வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால்,

- பாதுகாப்பு வழங்கக்கூடிய சிறந்த இடத்தில் காரை நிறுத்தவும்.
- அதிர்வு நிற்கும்வரை காரில் தங்கியிருக்கவும்.
- நில அதிர்வு நிகழ்ந்த பின்னர் காரை செலுத்தி செல்லும் போது பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், விழுந்த பொருட்கள், விழுந்துள்ள மின்கம்பிகள் சேதமாக்கப்பட்ட அல்லது பள்ளமான வீதிகள் என்பவற்றை அவதானித்துச் செல்லவும்.

# பூமி அதிர்ச்சியின் பின்னர்

- திறந்த வெளிக்கு நகரும்போது மின்சார இணைப்புக்கள், மின்கம்பங்கள், மரம், உயரமான கட்டிடங்கள், சுவர், மின்விளக்கு, கம்பங்கள் என்பவற்றிலிருந்து கவனமாக இருக்கவும்.



கதவு வழிக்கு வெளிப் பக்கம் மற்றும் வெளிப்பக்க சுவர்பக்கமாக விழுகின்ற சுவர் இடிபாடுகள் மிகவும் ஆபத்தானவை. விழுந்துள்ள மின்கம்பிகளில் இருந்து தூர விலகியிருக்கவும்.

- அதிர்வு நிற்கும் வரை வெளியான பிரதேசத்தில் நிற்கவும்.
- விழுகின்ற செங்கட்டி, கண்ணாடி, சுவர் பூச்சு மற்றும் இடிபாடுகளில் இருந்து உங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் கதவு வழியாக குனிந்து செல்லவும்.
- நுழைவாயிலை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம் அல்லது 100 பேர் வெளியேறும் வாயிலூடாக வெளியேறும் சிந்தனையை வைத்திருக்கலாம்.



- பொருட்கள் உள்ள அலுமாரியில் இருந்து பொருட்கள் உங்கள் மீது விழ வாய்ப்பு இருப்பதனால் அவற்றில் இருந்து விலகியிருக்கவும்.
- பாதுகாப்பு வழங்கக்கூடிய சிறந்த இடத்தில் காரை நிறுத்தவும்.
- அதிர்வு நிற்கும் வரை காரில் தங்கியிருக்கவும்.
- நில அதிர்வு நிகழ்ந்த பின்னர் காரை செலுத்தி செல்லும்போது பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், விழுந்த பொருட்கள், விழுந்துள்ள மின்கம்பிகள், சேதமாக்கப்பட்ட அல்லது பள்ளமான வீதிகள் என்பவற்றை அவதானித்துச் செல்லவும்.